## பென்னாத்துார் பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களின் நடவடிக்கைகள்
### முன்னிலை – திரு. சி.ஜெயக்குமார்

ப.மு.எண்.226/2019 நாள்.31.10.2019

பொருள் : அனுமதியற்ற மனைப்பிரிவு வரன்முறைப்படுத்துதல் திட்டம் – 2017 – பேரூராட்சிகள் நிர்வாகம் – வேலூர் மாவட்டம் – பென்னாத்துார் பேரூராட்சி – நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அலுவலகம், வேலூர் மண்டலம் – வேலூர் மாவட்டம் – வேலூர் வட்டம் பென்னாத்துார் பேரூராட்சி சர்வே எண்.237/1டி1(ப)–ல் 1.34 ஏக்கர் பரப்பில் அமையும் அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவினை வரன்முறைப்படுத்தி கொள்கை அளவிலான மனைப்பிரிவு ஒப்புதல் வழங்கியது – அங்கீகரிக்கப்படாத குடியிருப்பு மனைப்பிரிவுகள் வரன்முறைசெய்து உத்திரவிடுதல் தொடர்பாக.

பார்வை :

1. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், வேலூர் மண்டலம், வேலூர் அவர்களது கடிதம் ந.க.எண்.5716/2018/வேம3 நாள்.24.07.2019.
2. கணியம்பாடி சார்பதிவாளர் அலுவலக நன்கொடை பத்திரம் ஆவண எண். 2410/2019 நாள்.23.10.2019.
3. பாரத மாநில வங்கி, வேலூர் செலுத்து சீட்டு நாள்.29.10.2019 (வரன்முறைப்படுத்துதல் கட்டணம்).
4. இப்பேரூராட்சி மன்றத் தீர்மானம் எண்.242 நாள்.16.08.2019
5. பென்னாத்துார் பேரூராட்சி பல்வகை ரசீது எண்.64 நாள்.31.10.2019 (வளர்ச்சிக் கட்டணம் மற்றும் இதர கட்டணம் (BY RTGS on 30/10/2019).
6. ம.வ./ந.ஊ.து.இ(வே.ம)வரன்முறைப்படுத்துதல் எண்.550(ஆர்)/2019.
7. தொடர்புடைய கோப்புகள்

-----

**உத்திரவு**

பார்வை 1–ல் காணும் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், வேலூர் மண்டலம், வேலூர் அவர்களது உத்திரவில், வேலூர் மாவட்டம் பென்னாத்துார் பேரூராட்சி சர்வே எண்.237/1டி1(ப)–ல் 1.34 ஏக்கர் பரப்பிற்கு அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவினை வரன்முறைப்பத்தி கொள்கை அளவிலான மனைப்பிரிவிற்கு ம.வ./ந.ஊ.து.இ(வேம) வரன்முறைப்படுத்துதல் எண்.550(R)/2019 என எண்ணிடப்பட்டு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி உத்திரவில் தெரிவிக்கப்பட்டுள்ள விற்கப்படாத மனைகளுக்குண்டான பூங்காங்களுக்கான திறவெளி ஒதுக்கீடு இடங்கள் 4975.00 ச.அடி இடங்கள் மற்றும் மனைப்பிரிவில் அமைந்துள்ள சாலைகள் பார்வை 2–ல் காணும் ஆவணம் மூலம் கணியம்பாடி சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டு அதற்கான அசல் பத்திரம் பெறப்பட்டுள்ளது. மேலும் மேற்படி உத்திரவில் தெரிவித்துள்ளவாறு நகர் ஊரமைப்பு துறைக்கு செலுத்த வேண்டிய அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவுகளை வரன்முறைப்படுத்தலுக்கான கட்டணத் தொகை ரூ.1,22,066/– வேலூர் பாரத மாநில வங்கி கிளையில் 29.10.2019–ம் தேதியில் உரிய தலைப்பில் செலுத்தப்பட்டு பார்வை 3–ல் கண்டுள்ளவாறு அசல் சலான் பெறப்பட்டுள்ளது.

பேரூராட்சிக்கு செலுத்த வேண்டிய வளர்ச்சிக் கட்டணம் மற்றும் இதர கட்டணங்கள் ரூ.3,08,565/– பார்வை 5–ல் காணும் பென்னாத்துார் பேரூராட்சி பல்வகை ரசீது எண்.64/2019–20 நாள்.31.10.2019 (RTGS) மூலம் செலுத்தப்பட்டுள்ளதை தொடர்ந்து பார்வை 1–ல் காணும் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் வேலூர் மண்டலம் வேலூர் அவர்களது உத்திரவில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு வேலூர் மாவட்டம் வேலூர் வட்டம் பென்னாத்துார் பேரூராட்சி சர்வே எண்.237/1டி1(ப)–ல் 1.34 ஏக்கர் பரப்பிற்கு அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவில் கீழ்க்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு 34 மனைகள் வரன்முறைப்படுத்தி இதன் மூலம் உத்திரவிடப்படுகிறது.

| | | |
|---|---|---|
| மனைப்பிரிவின் மொத்த பரப்பு | .. | 1.34 ஏக்கர் (அ) 58370.40 ச.அடி |
| மனைப்பிரிவில் அமைந்துள்ள மொத்த மனைகளின் எண்ணிக்கை | .. | 36 |
| விற்கப்பட்ட மனைகளின் எண்ணிக்கை | .. | 02 – 2460.00 ச.அடி<br>(1, 22) |
| விற்கப்படாத மனைகளின் எண்ணிக்கை | .. | 34 – 48772.00 ச.அடி<br>(2,3,4,5,6,7,8,9,10,11,12,13,14,15,16,17,18,19,20,21, 23,24,25,26,27,28,29,30,31,32,33,34,35,36) |
| விற்கப்படாத மனைகளுக்குண்டான பூங்கா பரப்பு | .. | 4975.00 ச.அடி |
| பூங்கா – 1 (மனை எண்.14, 36 ) | .. | 4975.00 ச.அடி |
| சாலை பரப்பு | | |
| சாலை 1 | .. | 3077.50 ச.அடி (அ) 285.90 ச.மீ |
| சாலை 2 | .. | 6000.00 ச.அடி (அ) 557.40 ச.மீ |
| சாலை 3 | .. | 2200.00 ச.அடி (அ) 204.38 ச.மீ |
| சாலை 4 | | 3972.50 ச.அடி (அ) 369.05 ச.மீ |

## நிபந்தனைகள்

1. அரசாணை எண் 78 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள்.04.05.2017 மற்றும் அரசாணை எண்.172 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள்.13.10.2017ன்படி யும் நகர் ஊரமைப்புத் துணை இயக்குநர், வேலூர் மண்டலம், வேலூர் அவர்களது உத்திரவு ந.க.எண்.2404/2017/வேம3 நாள்.14.12.2017ன் படியும் தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்ட அனுமதியற்ற குடியிருப்பு மேற்குறிப்பிடப்பட்டுள்ள அரசாணை மற்றும் நகர் ஊரமைப்புத் துறையின் உத்திரவில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு மனைப்பிரிவு வரன்முறைப்படுத்தப்படுகிறது.

2. வரன்முறைப்படுத்தப்பட்ட அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவின் பரிசீலனைக்கு நில உரிமம் குறித்து வழங்கப்பட்டுள்ள சான்றுகள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவை அல்ல என்று அறியப்பட்டால் மனைப்பிரிவுகள் வரன்முறைப்படுத்தப்பட்டது எவ்வித முன்னறிவிப்புமின்றி இரத்து செய்யப்படும்.

3. தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்ட மனைப்பிரிவுகளை ஒப்புதல் வழங்கப்பட்டுள்ள குடியிருப்பு பயன்பாட்டிற்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும்.

4. நகர் ஊரமைப்பு துறையினால் தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்ட மனைகளை நகர் ஊரமைப்புத் துறையின் அனுமதியின்றி உட்பிரிவு செய்து விற்பனை செய்யக்கூடாது. மாறுதல் ஏதேனும் செய்ய நேர்ந்தால் நகர் ஊரமைப்புத் துறையின் ஒப்புதல் மற்றும் பேரூராட்சியின் அனுமதி பெற்றே மேற்கொள்ளப்பட வேண்டும்.

5. நகர் ஊரமைப்பு துறையினரால் தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ள உத்திரவில் தெரிவிக்கப்பட்டுள்ள பூங்கா மற்றும் சாலை பகுதியினை எவ்வித மாறுதலுக்கும் உட்படுத்தவோ விற்பனை செய்யவோ கூடாது.

6. மனுதாரரால் விற்கப்படாத மனைகளுக்கான வரன்முறைப்படுத்துதல் கட்டணம் உரிய தலைப்பில் செலுத்தப்பட்டுள்ளது. விற்கப்பட்ட மனைகளுக்கு மனைகளை வாங்கிய உரிமைதாரர்கள் தனித்த மனைகளுக்கு ஒப்புதல் பெறும்போது 1 ச.மீ.க்கு ரூ.30/– வீதம் வரன்முறைப்படுத்தல் கட்டணம் உரிய தலைப்பில் செலுத்தப்பட வேண்டும்.

7. மனுதாரரால் விற்கப்படாத மனைகளுக்கான வளர்ச்சி கட்டணம் பேரூராட்சிக்கு செலுத்தப்பட்டுள்ளது. விற்கப்பட்ட மனைகளுக்கு மனைகளை வாங்கிய உரிமைதாரர்கள் தனித்த மனைகளுக்கு ஒப்புதல் பெறும்போது 1 ச.மீ.க்கு ரூ.75/– வீதம் வளர்ச்சிக் கட்டணம் மற்றும் இதர கட்டணங்கள் பேரூராட்சிக்கு செலுத்தப்பட வேண்டும்.

8. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எந்தவித மாற்றமுமின்றி மனைப்பிரிவின் நுழைவாயிலில் 6 x 4 அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தமாக வைக்கப்பட வேண்டும்.

9. விதிகளின்படி வரன்முறைப்படுத்திய மனையில் அமையும் கட்டிடம் வரன்முறைப்படுத்தியதற்கு பொறுப்பாகாமை ஆகும். மற்றும் எந்த ஒரு உரிமையாளரும் அதில் கட்டப்பட்ட கட்டிடத்தை பேரூராட்சியிடம் முறையாக அணுகி விதிவரையறைகளின்படி ஒப்புதல் பெற்றுக்கொள்ள வேண்டும்.

10. நகர் ஊரமைப்புத் துறையினரால் தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்ட கொள்கை அளவிலான மனைப்பிரிவு ஒப்புதல் அவ்வபோது அரசால் அறிவிக்கப்படும் அரசாணைகள் மற்றும் வழிகாட்டு நெறிமுறைகளுக்குட்பட்டது, மேலும் அவ்வப்போது பிறப்பிக்கப்படும் அரசாணை மற்றும் நெறிமுறைகளை பின்பற்றி நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்படுகிறது.

பேரூராட்சி அலுவலகம் நாள் 31/10/15 பென்னாத்தூர், வே.மா – 632058

செயல் அலுவலர்
பென்னாத்தூர் முதல்நிலை பேரூராட்சி
வேலூர் மாவட்டம்.

பெறுநர்

திரு.டி.கோவிந்தராஜபெருமாள்,
க.எண்.12, 15–வது கிழக்கு மெயின்ரோட்,
காந்திநகர்,
வேலூர்–6.

நகல் – நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், வேலூர் மண்டலம் வேலூர். 632005 அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.

நகல் – வட்டாட்சியர், வேலூர்.

நகல் – சார்பதிவாளர், கணியம்பாடி.

நகல் – கோப்பிற்கு.

APPlicant

பதிவு அஞ்சல் ஒப்புகை சான்றுடன்

**<u>நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்</u>**
வேலூர் மண்டலம் அவர்களின் நடவடிக்கைகள்
முன்னிலை : **திரு. எஸ். ஞானமணி, ஏ,எம்,ஐ,இ,**

**ந.க.எண்.5716/2018/வேம3,** **நாள்:24.07.2019**

* * * * *

| | |
|---|---|
| பொருள் : | அனுமதியற்ற மனைப்பிரிவு வரன்முறைபடுத்துதல் திட்டம் – 2017 – **1.34** ஏக்கர் **(5422.61** ச.மீ) பரப்பளவு மனை இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்குதல்– தொடர்பாக. |
| பார்வை : | 1. அரசாணை எண் : 78, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை ந.வ.**4(3)**, நாள் : 04.05.2017.<br>2. அரசாணை எண் : 172, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை ந.வ.**4(3)**, நாள் : 13.10.2017.<br>3. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் Operational Guideline, Roc. No.13193/2017/LA2, நாள். 30.10.2017, 31.10.2017, 03.11.2017, 07.11.2017, 17.11.2017 மற்றும் 20.12.2017.<br>4. அரசாணை எண் :55, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை ந.வ.**4(3)**, நாள் : 02.05.2018.<br>5. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கைகடிதம் Roc. No 13193/2017/LA2, நாள் : **02.05.2018** மற்றும் 07.01.2019<br>6. மனுதாரர் Mr.D.Govindharaja Perumal அவர்களின் விண்ணப்பம் நாள்: **31**.10.2018<br>7. அரசாணை எண் : 21, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை ந.வ.**4(3)**, நாள் : 05.02.2019.<br>******** |

**உத்தரவு :**

பார்வை **(1)** மற்றும் **(2)**–ல் கண்ட அரசாணையின்படியும் பார்வை **(3)**–ல் கண்ட வழிகாட்டி நெறிமுறைகளின்படியும் பார்வை **(4)**–ல் கண்ட கடிதத்துடன் பெறப்பட்ட உத்தேசம் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் உத்தரவு வழங்கப்படுகிறது.

வேலூர் மாவட்டம், வேலூர் வட்டம், பென்னாத்தூர் தேர்வுநிலைப்பேரூராட்சி , பென்னாத்தூர் கிராமம், சர்வே எண்கள் : **237/1டி1**(ப) –ல் **1.34** ஏக்கர் **(5422.61** ச.மீ) பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு **ம.வ./ந.ஊ.து.இ (வே.ம.) வரன்முறைபடுத்துதல் எண்: 550 (R)/2019** என எண்ணிடப்பட்டு கீழ்க்காணும் நிபந்தனைகளுடன் கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| மனைப்பிரிவின் மொத்த பரப்பு | : | 5422.610 ச.மீ. (அ) 58370.40 ச.அடி (அ) 1.34 ஏக்கர் |
| மொத்த மனைகளின் எண்ணிக்கை | : | 36 |
| விற்கப்பட்ட மனைகளின் எண்ணிக்கை | : | 02 |
| விற்கப்பட்ட மனை எண்கள் | : | 1, 22 |
| விற்கப்பட்ட மனைகளின் மொத்த பரப்பளவு | : | 2460.00 ச.அடி |
| விற்கப்படாத மனைகளின் எண்ணிக்கை | : | 34 |
| விற்கப்படாத மனைகளின் எண்கள் | : | 2–21, 23–36 |
| விற்கப்படாத மனைகளின் மொத்த பரப்பளவு | : | 48772.00 ச.அடி |
| ஒதுக்கிய மனைகளின் எண்ணிக்கை | : | 34 |
| திறவெளி ஒதுக்கீடு (OSR) இடத்தின் பரப்பு | : | 4975.00 ச.அடி – 10.20 % |

( மனை எண்கள் : 14 (ம) 36 )
விற்கப்படாத மனைகளின் பரப்பு பூங்கா பரப்பு நீங்கலாக – 43797.00 ச.அடி

**செலுத்தப்பட வேண்டிய கட்டண விவரம்**

1. பரிசீலனைக் கட்டணம்

| | |
|---|---|
| அ. இணையதள வாயிலாக மனை ஒன்றிக்கு ரூ.500/– வீதம் பரிசீலனைக் கட்டணம் செலுத்திய மனை எண்களின் விவரம் | ONLINE REGISTRATION NO : DTCP/L/ 0560842/2017. நாள். 30.10.2018–ன் படி விற்கப்படாத 34 மனைகளுக்கான கூராய்வு கட்டணம் ஒரு மனைக்கு ரூ.500/– வீதம் ரூ.17000/– ONLINE–ல் செலுத்தப்பட்டுள்ளது. |

பரிசீலனைக் கட்டணம் செலுத்தப்படாத மனைகளுக்கு அக்கட்டணத்தை இணையதளம் வாயிலாக செலுத்தப்பட வேண்டும்.

**1. வரன்முறைப்படுத்தும் கட்டணம் மற்றும் வளர்ச்சிக் கட்டணம்**

| மனை எண் | பரப்பளவு (ச.மீ) | வரன்முறைப்படுத்தும் கட்டணம் (ஒரு சதுர மீட்டருக்கு 30/– (ரூபாய் முப்பது வீதம்) | வளர்ச்சிக் கட்டணம் (ஒரு சதுர மீட்டருக்கு 75/– (ரூபாய் எழுபத்தைந்து வீதம்) |
|---|---|---|---|

மேற்காண் வரன்முறைப்படுத்தும் கட்டணம் மற்றும் வளர்ச்சிக் கட்டணம் இணைய தளம் வாயிலாகவும் அல்லது கீழ்க்கண்டவாறு நேரிலும் செலுத்தலாம்.

**அ) வரன்முறைப்படுத்தும் கட்டணம் செலுத்துவதற்கான அரசு கணக்குத் தலைப்பு**

| | |
|---|---|
| " 0217 - Urban Development<br>60 - Other Urban Development Schemes<br>800 - Other receipts<br>AT - Receipts under Regularization charges of Unapproved Layout and Plots - DTCP<br>27 - Non Taxation Fees<br>30 - Regularisation<br>DPC : 0217 60 800 AT 2730) " | சலான் மூலம் அரசு கருவூலத்தில் செலுத்தலாம். |

ஆ) வளர்ச்சிக் கட்டணம் கீழ்க்காண் உள்ளாட்சியின் வங்கிக் கணக்கில் நேரில் செலுத்தலாம்.

மேற்காணும் கட்டணங்களை செலுத்திய பின்னரே சம்பந்தப்பட்ட மனைகளுக்கு உள்ளாட்சியால் வரன்முறை ஆணை வழங்கப்பட வேண்டும். விற்கப்படாத மனைகளைப் பொறுத்தமட்டில் அனைத்து மனைகளுக்கு அல்லது பகுதி மனைகளுக்கு மட்டும் கட்டணத்தை செலுத்தி சம்பந்தப்பட்ட மனைகளுக்கான வரன்முறை ஆணையைப் பெற்றுக் கொள்ளலாம்.

**03.11.2018–க்கு பின்னர் கூராய்வு கட்டணம் செலுத்தப்படும் மனைகளுக்கு பார்வை 7–ல் காணும் அரசாணையில் தெரிவித்துள்ளவாறு கட்டணங்கள் வசூலிக்கப்பட வேண்டும்.**

**பார்வை 1, 2 மற்றும் 7–ல் சுட்டிய அரசாணைகளின்படி மேற்காண் கட்டணம் தவிர வேறு கட்டணம் ஏதும் உள்ளாட்சி வசூலித்தல் கூடாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.**

நிபந்தனைகள்

1. அரசாணை (நிலை) எண்.78, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, நவ4(3) நாள்.13.10.2017–ல் விதி எண்.7 (g) (ii) மனைப்பிரிவு வரைபடத்தில் உள்ளவாறு சாலைகள் (ம) திறந்தவெளி ஒதுக்கீடு (OSR) இடங்கள் சம்பந்தப்பட்ட உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டதாக கருதப்படும்.
2. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் (ம) பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் (அ) மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட கொள்கை அளவிலான ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பின்றி ரத்து செய்யப்படும்.

கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவிற்கு வரைபடம் இரண்டு நகல்கள் மேல் நடவடிக்கைக்காக இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது.

24/7/19

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்,
வேலூர் மண்டலம்.–1

24/7/19
24/7/19

**இணைப்பு:**

மனைப்பிரிவு வரைபடம் – 2.

**பெறுநர்,**

செயல் அலுவலர்,
பென்னாத்தூர் தேர்வுநிலைப்பேரூராட்சி ,
வேலூர் வட்டம்,
வேலூர் மாவட்டம்.

நகல்:

| | |
|---|---|
| 1. மனுதாரர்.<br>Mr.D.Govindharaja Perumal ,<br>No.12, 5th East Main Road,<br>Gandhi Nagar,<br>Vellore. | உள்ளாட்சிக்கு தேவையான ஆவணங்கள் மற்றும் விவரங்கள் சமர்ப்பிக்கும் பொருட்டு |
| 2. உதவி இயக்குநர்,<br>நில அளவை (ம) பதிவேடுகள் துறை,<br>வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம்,<br>வேலூர் மாவட்டம். | சாலை (ம) பூங்கா பகுதியினை உள்ளாட்சியின் பெயரில் வருவாய் ஆவணங்களில் உட்பிரிவு செய்யும் பொருட்டு |
| 3. வட்டாட்சியர்,<br>வேலூர் வட்டம்,<br>வேலூர் மாவட்டம். | சாலை (ம) பூங்கா பகுதியினை உள்ளாட்சியின் பெயரில் வருவாய் ஆவணங்களில் உட்பிரிவு செய்யும் பொருட்டு |
| 4. சார்பதிவாளர்,<br>கணியம்பாடி சார்பதிவாளர் அலுவலகம்,<br>வேலூர் மாவட்டம். | சாலை (ம) பூங்கா பகுதியினை உள்ளாட்சியின் பெயரில் வருவாய் ஆவணங்களில் உட்பிரிவு செய்யும் பொருட்டு |
| 5. நகர் ஊரமைப்பு ஆணையர்,<br>807, அண்ணா சாலை,<br>சென்னை – 2. | (பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது) |
| 6. கோப்பு<br><br>7. வைப்பறை | |